செ.வெ.எண்: 22 நாள்: 11.07.2016

# புதுக்கோட்டை நீதிமன்ற வளாகத்தில் விளம்பர பலகை அமைக்கும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் விளம்பர பதாகைகள் நிறுவது தொடர்பான அரசு அலுவலர்கள் மற்றும் ப்ளக்ஸ் போர்டு உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.07.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் டிஜிட்டல் ப்ளக்ஸ் பேனர்கள் மற்றும் விளம்பர பலகைகள் மாவட்ட ஆட்சியர் அனுமதியுடன் நிறுவுவதற்கு பல்வேறு வழிகாட்டுதல்கள் பின்பற்றுவது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் ஆலோசனைக்கூட்டம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் காவல்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு அலுவலர்கள், டிஜிட்டல் பிளக்ஸ் பேனர் உரிமையாளர்கள், போக்குவரத்து துறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்கள் ஆகியோர்களுடனான ஆலேசானைக்கூட்டம் இன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசாணையின்படி விளம்பரபலகைகள் மற்றும் டிஜிட்டல் பேனர்களை நகர்ப்பகுதிகளில் நிறுவ விரும்புவோர் தனியார் இடமாக இருந்தால், நில உரிமையாளரிடம் தடையின்மைச் சான்றும், நகராட்சி பகுதியாக இருந்தால் ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி அவர்களிடமிருந்து தடையின்மைச் சான்றும், காவல் துறையினரிடமிருந்து தடையின்மைச் சான்றும் பெற்று படிவம் 1 மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் மனுவுடன் மாவட்ட அளவிலான குழு நிர்ணயம் செய்யும் தொகையினை விண்ணப்பதாரர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் செலுத்த வேண்டும். விளம்பர பேனர் நிறுவுவதற்கான அனுமதி விண்ணப்பம் (படிவம்-1) நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் பொழுது மாவட்ட ஆட்சியர் அவர்கள், விண்ணப்பம் மற்றும் இணைப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து, படிவம் - II ன்படி விளம்பர பலகைகள் நிறுவுவதற்கு 6 நாட்களுக்கு மிகாமல் அனுமதி வழங்கப்படும். அதே சமயம் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் முழுமையாக இல்லாத பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் படிவம் - IIIன்படி அந்த விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யப்படும்.

மேலும் சாலையின் அகலத்தை பொறுத்து அதற்கேற்ப விளம்பர பலகைகள் நிறுவ அரசால் அளவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி சாலையின் அகலம் 100' க்குமேல் இருந்தால் 15' (உயரம்) x 24' (அகலம்) உள்ள அளவுகளில் விளம்பர பலகைகள் நிறுவ வேண்டும். இதே போன்று 60' - 100' வரை இருந்தால் 12' (உயரம்) x 20' (அகலம்), 40' - 60' வரை இருந்தால் 10' (உயரம்) x 16' (அகலம்), 20' - 40' வரை இருந்தால் 8' (உயரம்) x 5' (அகலம்), 10' - 20' வரை இருந்தால் 3' (உயரம்) x 2.5' (அகலம்) போன்ற அளவுகளில் விளம்பர பலகைகள் நிறுவ வேண்டும்.

மேலும் பள்ளிக்கூடங்கள், கோயில்கள், மருத்துவமனைகள், சாலைகளின் சந்திப்பு, டிராபிக் ஐலேண்ட், நினைவுச்சின்னங்கள், சிலைகள் மற்றும் சுற்றுலாத்தளங்களை மறைக்கும் வகையிலும் நீதிமன்ற வளாகம் மற்றும் சுற்றுச்சுவர், அரசு அலுவலகங்கள் அருகில் மின்கம்பங்கள் மற்றும் மரங்களின் மீது விளம்ரபலகைகளை அமைக்கக்கூடாது. அனுமதி பெற்ற விளம்பர பலகைகள் மற்றும் டிஜிட்டல் பேனர்களின் கீழ்ப்புறம் 1" உயரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி ஆணை எண், அனுமதிக்கும் காலஅளவு, வைக்கப்படும் விளம்பர பலகைகளின் எண்ணிக்கை மற்றும் ப்ளக்ஸ் பேனர் உரிமையாளர்களின் கடை பற்றிய விபரம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தவறாது இடம் பெற வேண்டும். மேலும் இக்கூட்டத்தை தொடர்ந்து விளம்பர பலகைகள் வைப்பது தொடர்பாக மண்டல அளவில் கூட்டம் நடத்தப்படும். இக்கூட்டத்தில் விளம்பர பலகைகள் நிறுவுதலை வரன்முறைப்படுத்த ஏதுவாகவும் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி விளம்பர பலகைகள் நிறுவுவதற்கும், நகருக்குள் விளம்பர பலகைகள் நிறுவ தகுதியான இடங்களை கலந்தாலோசித்தும் முடிவு எடுக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, புதுக்கோட்டை சார்ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், நகராட்சி ஆணையர் திரு.ராசாராம், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பாலகுரு, காவல் ஆய்வாளர் திரு.தினேஷ்குமார், அலுவலக மேலாளர் (நீதியியல்) திரு.கண்ணா கருப்பையா, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**